## வகுப்பு - 7 - பருவம் - 3 - புவியியல் 1 - கண்டங்களை ஆராய்தல்

## வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா

**பயிற்சி வினாக்கள்**

1. "புதிய உலகு" என அழைக்கப்படும் கண்டங்களில் ஒன்று ______.

(1) ஐரோப்பா (2) ஆசியா

(3) வடஅமெரிக்கா (4) ஆப்பிரிக்கா

2. 1492ஆம் ஆண்டு வட அமெரிக்காவை ______ என்பவர் கண்டுபிடித்தார்

(1) கிறிஸ்டோபர் கொலம்பஸ் (2) அமெரிக்கோ வெஸ்புகி

(3) வாஸ்கோடகாமா (4) ஜோசப் வில்சன்

3. ஆசியா, ஆப்பிரிக்காவிற்கு அடுத்தபடியாக மூன்றாவது பெரிய கண்டம் ______.

(1) ஆசியா (2) வடஅமெரிக்கா

(3) ஐரோப்பா (4) ஆப்பிரிக்கா

4. வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைப்பது ______.

(1) பேரிங் நீர்ச்சந்தி (2) பனாமா நிலச்சந்தி

(3) மிஸிஸிப்பி (4) மிஸ்சௌரி

5. வட அமெரிக்காவை ஆசியாவில் இருந்து பிரிப்பது ______.

(1) ஜிப்ரால்டர் நீர்சந்தி (2) பாக் நீர் சந்தி

(3) பேரிங் நீர்ச்சந்தி (4) மலாக்கா நீர் சந்தி

6. கீழ்க்கண்ட வாக்கியங்களில் சரியானது எது?

i. இரண்டு மிகப் பெரிய நிலப்பகுதிகளை இணைக்கும் சிறிய துண்டு நிலச்சந்தி

ii. இரண்டு பெரிய நீர் பரப்புகளை இணைக்கும் சிறிய நீர்ப்பரப்பு நீர்ச்சந்தி

(1) i மட்டும் சரி (2) ii மட்டும் சரி

(3) i, ii இரண்டும் சரி (4) மேற்கண்ட எதுவுமில்லை

LIVEWORKSHEETS

7. வட அமெரிக்கா _______ நேரமண்டலங்களை உள்ளடக்கியுள்ளது

(1) 6 (2) 8 (3) 7 (4) 9

8. வட அமெரிக்காவில் உள்ள கிரேட் ஏரிகள் _______ முக்கிய ஏரிகளை கொண்டுள்ளது

(1) 7 (2) 5 (3) 8 (4) 2

9. மெக்ஸிகோவிற்கு தென் பகுதியில் அமைந்துள்ள _______ நாடுகள் கொண்ட பகுதி மத்திய அமெரிக்கா என அழைக்கப்படுகிறது

(1) 7 (2) 6 (3) 8 (4) 10

10. _______ பயிர் ஐரோப்பிய குடியேற்றங்களில் வட அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது

(1) சோளம் (2) கம்பு (3) கரும்பு (4) கோதுமை

11. வட அமெரிக்காவின் பூர்வீக மக்களின் முக்கிய உணவுப் பயிர் _______.

(1) சோளம் (2) கோதுமை (3) கம்பு (4) தினை

12. வட அமெரிக்காவின் தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் _______ நன்கு விளைகின்றது

(1) கோதுமை (2) பருத்தி (3) சோளம் (4) கம்பு

13. இயற்கை அமைப்பு பிரிவுகளில் மிகப்பெரிய பன்முகத் தன்மையை கொண்ட கண்டம் _______.

(1) ஆப்பிரிக்கா (2) அண்டார்டிகா

(3) ஆசியா (4) வட அமெரிக்கா

14. வட அமெரிக்கா கண்டத்தின் மிக ஆழமான பகுதி _______.

(1) மெக்கென்லீ (2) மரணப் பள்ளத்தாக்கு

(3) லாப்ரடார் (4) லாரன்ஷியன்

LIVEWORKSHEETS

15. பூமியின் மிகவும் பழமையான மற்றும் இளமையான பாறைகள் கீழ்க்கண்டவற்றில் எங்குள்ளது?

(1) ராக்கி மலைகள்
(2) மரண பள்ளத்தாக்கு
(3) ஆண்டிஸ் மலை
(4) அகான்காகுவா

16. வட அமெரிக்காவில் ராக்கி மலைப்பகுதி அமைந்துள்ள திசை _______.

(1) வடக்கு
(2) கிழக்கு
(3) மேற்கு
(4) தெற்கு

17. பசிபிக் நெருப்பு வளையத்தின் ஒரு பகுதி மற்றும் பல இயங்கும் எரிமலைகளைக் கொண்டுள்ள பகுதி _______.

(1) வின்சின் மாசிப்
(2) கார்டில் லெராஸ்
(3) கிராண்ட் பேங்க்
(4) அட்லாண்டா

18. அண்டார்டிகா கண்டத்தின் உயரமான சிகரம் _______.

(1) எவரெஸ்ட்
(2) கிளிமஞ்சாரோ
(3) வின்சன்மாசிப்
(4) காஸ்கியூஸ்கோ

19. அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் கொலராடோ ஆற்றினால் உருவாக்கப்பட்ட செங்குத்தான பக்கங்களைக் கொண்ட மிக ஆழமான பள்ளத்தாக்கு _______.

(1) கிராண்ட் கேன்யான்
(2) கிராண்ட் பேங்க்
(3) மரணப் பள்ளத்தாக்கு
(4) செல்வாஸ்

20. "பெரிய சேற்று ஆறு" என அழைக்கப்படுவது _______.

(1) மிஸ்சௌரி ஆறு
(2) மிஸிஸிப்பி ஆறு
(3) அமேசான்
(4) நைல்

21. ஒன்டேரியோ ஏரியில் தன் பயணத்தை துவங்கி வடகிழக்காக பயணித்து அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கும் ஆறு ______

LIVEWORKSHEETS

(1) மெக்கன்ஸி ஆறு (2) மிஸிஸிப்பி

(3) மிஸ்ஸௌரி (4) புனித லாரன்ஸ்

22. ________ ஆறு ஆண்டின் எட்டு மாதங்களுக்கு உறைந்த நிலையிலேயே காணப்படுகிறது

(1) யூகான் (2) ரியோ கிரேன்டி

(3) அமேசான் (4) தாபாஜோஸ்

23. பனாமா கால்வாய் வெட்டப்பட்ட ஆண்டு ______.

(1) 1914 (2) 1913 (3) 1926 (4) 1941

24. பொருத்துக

| கண்டங்கள் | உயரமான சிகரங்கள் |
|---|---|
| i. வட அமெரிக்கா | - a. காஸ்கியூஸ்கோ |
| ii. ஆஸ்திரேலியா | - b. கிளிமஞ்சாரோ |
| iii. ஐரோப்பா | - c அகான்காகுவா |
| iv. ஆப்பிரிக்கா | - d. மெக்கென்லீ |
| | - e. எல்பரஸ் |

| | i | ii | iii | iv | | i | ii | iii | iv |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | a | b | c | d | (2) | d | c | b | e |
| (3) | a | d | b | e | (4) | d | a | e | b |

25. பனாமா கால்வாய் இணைக்கும் கடல்கள் ______.

(1) பசிபிக், ஆர்டிக் (2) அட்லாண்டிக், பசிபிக்

(3) இந்தியப்பெருங்கடல், சாக்கடல் (4) ஆர்டிக், லாப்ரடன் கடல்

26. உலகின் மிகப்பெரிய இரயில்வே முனையம் எங்கு உள்ளது?

(1) நியூயார்க் (2) சிக்காகோ (3) கனடா (4) மெக்சிகோ

LIVEWORKSHEETS

27. வட மேற்கில் அலாஸ்காவையும், தெற்கில் பனமாவையும் இணைக்கும் சாலை

(1) பான் அமெரிக்கன் நெடுஞ்சாலை (2) நியூயார்க் நெடுஞ்சாலை

(3) சிகாகோ சாலை (4) கனடா நெடுஞ்சாலை

28. "உருகும் பானை" என அழைக்கப்படுவது ______.

(1) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (2) வடஅமெரிக்கா

(3) கனடா (4) கிரீன்லாந்து

29. செயற்கை இழை தயாரிப்பில் உலகின் இரண்டாம் இடத்தை பெற்றுள்ள நாடு

(1) மெக்ஸிகோ (2) ஆஸ்திரேலியா

(3) இந்தியா (4) வடஅமெரிக்கா

30. கனடாவிலுள்ள ______ இல் காகிதத் தொழிற்சாலைகள் அதிக அளவில் காணப்படுகின்றன

(1) உதா (2) நிவடா (3) ஒன்டாரியோ (4) கிகுபெக்

31. உலகின் மிகச்சிறந்த மீன்பிடி தளம் ______.

(1) கிராண்ட் பேங்க் (2) கடோபாக்ஸி (3) ஹம்போல்ட் (4) பெரு

32. வட அமெரிக்காவையும் ஆசியாவையும் ______ பிரிக்கிறது.

(1) பேரிங் நீர் சந்தி (2) பாக் நீர் சந்தி

(3) மலாக்கா நீர் சந்தி (4) ஜிப்ரால்டர் நீர் சந்தி

33. ------------------வட அமெரிக்காவின் நீளமான ஆறுகள் ஆகும்.

(1) மிஸிஸிப்பி மற்றும் மிஸ்ஸௌரி (2) மெக்கென்ஸி ஆறு

(3) புனித லாரன்சு ஆறு (4) கொலரடோ ஆறு

34. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க

கூற்று : வட அமெரிக்காவின் தெற்கு மற்றும் மேற்கு மாநிலங்களில் பருத்தி நன்றாக வளருகிறது.

LIVEWORKSHEETS

காரணம் : மழையுடன் கூடிய வெப்பமான கோடைகாலம் மற்றும் வளமான மண் ஆகியவை பருத்தி விளைவதற்கான ஏற்ற சூழல்களாக உள்ளன.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.

(2) கூற்று சரி, காரணம் தவறு.

(3) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

35. மரண பள்ளத்தாக்கு கடல் மட்டத்திலிருந்து _______ மீட்டர் ஆழத்தில் உள்ளது.

(1) 86 (2) 76 (3) 96 (4) 66

LIVEWORKSHEETS